ஸ்ரீ:

ஸ்ரீ பூர்வரங்கநாயகீ ஸமேத ஸ்ரீ பூர்வரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ மதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வட்டம்

# கீழையூர்

## அருள்மிகு ஸ்ரீ பூர்வரங்கநாயகித் தாயார் ஸமேத

## அருள்மிகு ஸ்ரீ பூர்வரங்கநாதப் பெருமாள் ஆலய

# மண்டலாபிஷேக பூர்த்திவிழா

## 09-10-2015 வெள்ளிக்கிழமை முதல் 11-10-2015 ஞாயிற்றுக்கிழமை வரை

**பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்! அரங்கமா நகரு ளானே!**

அலைமகள், நிலமகள் உடன்கூடி ஆயனார் என்ற பெயரோடு அரங்கமா நகரில் அரியணையில் பள்ளிகொண்டு வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வழங்கி வரும் **ஸ்ரீ பூர்வரங்கநாயிகா** ஸமேத **ஸ்ரீ பூர்வரங்கநாதப் பெருமான்** தனது பரிவாரங்களுடன் ஸ்வஸ்தி ஸ்ரீ மன்மத வருஷம் ஆவணி மாதம் 10-ம் தேதி (27-08-2015) வியாழக்கிழமை மஹாசம்ப்ரோக்ஷணம் நடத்திக் கொண்டதை தொடர்ந்து நடைபெற்றுவரும் மண்டலாபிஷேகம் பூர்த்தி செய்துகொள்வதாக எம்பெருமான் திருவுள்ளம் பற்றிய வண்ணம், ஸ்வஸ்தி ஸ்ரீ மன்மத வருஷம் **புரட்டாசி மாதம்** 22-ம் தேதி தொடங்கி கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி பூஜைகள் மிகச்சிறப்பாக நடைபெற உள்ளன.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|
| புரட்டாசி 22 | 09-10-2015 | வெள்ளி | மாலை 6 மணி முதல் | ஸ்ரீ அதிரூபவல்லித்தாயார் சன்னதியில் 108 குத்துவிளக்கு பூஜை |
| புரட்டாசி 23 | 10-10-2015 | சனி | காலை 7:30 - 12:30 | 108 கலச திருமஞ்சனத்துடன் மண்டலாபிஷேக நிறைவு |
| | | | மாலை 5:30 - 7:30 | ஸ்ரீ அதிரூபவல்லித்தாயார் ஸ்ரீ ஆயனார் திருக்கல்யாண உத்ஸவம் |
| | | | இரவு 8:00 | ஸ்வாமி புறப்பாடு |
| புரட்டாசி 24 | 11-10-2015 | ஞாயிறு | காலை 8:00 - 1:00 பிற்பகல் 2.30 - 5.30 | லெக்ஷார்ச்சனை |

ஆஸ்திக மெய்யன்பர்கள் அனவரும் கலந்துகொண்டு தரிசனம் செய்து பெருமானின் பேரருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**கீழையூர் கிராமவாசிகள், சாகுபடிதாரர்கள்**
**திருப்பணி உபயதாரர்கள்**
மற்றும்
**கீழையூர் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஸங்கல்ப**
**டிரஸ்ட் அங்கத்தினர்கள்**

**தே. திருநாவுக்கரசு**
செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு)
இந்து சமய அறநிலையத்துறை,
நாகப்பட்டினம்

திருவிளக்கு பூஜையில் பங்குபெற விரும்பும் தாய்மார்கள், மற்றும் 108 கலச திருமஞ்சனம், லக்ஷார்ச்சனையில் பங்குபெற விரும்பும் உபயதாரர்கள் ஆலயத்தில் முன்பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்